# யூலை – 21 – பொதுக்கால 16ம் வார ஞாயிறு

**“தேவையானது ஒன்றே, மரியாவோ நல்ல பங்கைத் தேர்ந்துகொண்டாள்” லூாக்.10:42**

---

## முதல் வாசகம் தொடக்க நூல் 18 : 1 – 10

அக்காலத்தில் ஆண்டவர் மம்ரே என்ற இடத்தில் தேவதாரு மரங்களருகே ஆபிரகாமுக்குத் தோன்றினார். பகலில் வெப்பம் மிகுந்த நேரத்தில் ஆபிரகாம் தம் கூடாரவாயிலில் அமர்ந்திருக்கை யில், கண்களை உயர்த்திப் பார்த்தார் மூன்று மனிதர் தம் அருகில் நிற்கக்கண்டார். அவர்களைக் கண்டவுடன் அவர்களைச் சந்திக்கக் கூடார வாயிலைவிட்டு ஓடினார். அவர்கள்முன் தரைமட்டும் தாழ்ந்து வணங்கி, அவர்களை நோக்கி, ”என் தலைவரே, உம் கண்களில் எனக்கு அருள் கிடைத்தாயின், நீர் உம் அடியானை விட்டுக்கடந்து போகாதிருப்பீராக! இதோ விரைவில் கொஞ்சம் தண்ணீர் கொண்டு வரட்டும். உங்கள் கால்களைக் கழுவியபின், இம்மரத்தடியில் இளைப்பாறுங்கள். கொஞ்சம் உணவு கொண்டுவருகிறேன். நீங்கள் புத்துணர்வு பெற்றபின், பயணத்தைத் தொடருங்கள். ஏனெனில் உங்கள் அடியானிடமே வந்திருக்கிறீர்கள்” என்றார். ”நீ சொன்னபடியே செய்” என்று அவர்கள் பதில் அளித்தார்கள். அதைக்கேட்டு ஆபிரகாம் தம்கூடாரத்திற்கு விரைந்துசென்று, சாராவை நோக்கி, ”விரைவாக மூன்று மரக்கால் நல்ல மாவைப் பிசைந்து, அப்பங்கள் சுடு” என்றார். ஆபிரகாம் மாட்டு மந்தைக்கு ஓடிச்சென்று, ஒருநல்ல இளங்கன்றைக் கொணர்ந்து வேலைக் காரனிடம் கொடுக்க, அவன் அதனை விரைவில் சமைத்தான். பிறகு அவர் வெண்ணெய், பால், சமைத்த இளங்கன்று ஆகியவற்றைக் கொண்டுவந்து அவர்கள் முன்வைத்தார். அவர்கள் உண்ணும் பொழுது அவர்களருகே மரத்தடியில் நின்றுகொண்டிருந்தார். பின்பு அவர்கள் அவரை நோக்கி, ”உன் மனைவி சாரா எங்கே?” என்று கேட்க, அவர், ”அதோ கூடாரத்தில் இருக்கிறாள்” என்று பதில் கூறினார். அப்பொழுது ஆண்டவர் ”நான் இளவேனிற் காலத்தில் உறுதியாக மீண்டும் உன்னிடம் வருவேன. அப்பொழுது உன் மனைவி சாராவுக்கு ஒரு மகன் பிறந்திருப்பான்” என்றார்.

**பதில்பாடல் :** ஆண்டவரே! உம் கூடாரத்தில் தங்கிடத்
தகுதி உள்ளவர் யார்?

## இரண்டாம் வாசகம் : கொலேசேயர் : 1 : 24 - 28

சகோதரர் சகோதரிகளே! இப்பொழுது, உங்கள் பொருட்டுத் துன்புறுவதில் நான் மகிழ்ச்சிகொள்கிறேன். கிறிஸ்து தம் உடலாகிய திருச்சபைக்காக வேதனையுற்றார். அவர் மேலும் படவேண்டிய வேதனையை என் உடலில் ஏற்று நிறைவுசெய்கிறேன். என்மூலம் இறைவார்த்தையை முழுமையாக உங்களுக்கு வழங்கும் பொறுப்பைக் கடவுள் எனக்குக் கொடுத்தார். எனவே நான் திருத்தொண்டன் ஆனேன். நான் வழங்கும் இறைவார்த்தை ஊழி ஊழியாக, தலைமுறை தலைமுறையாக மறைந்திருந்த இறைத் திட்டத்தைப் பற்றியது. அத்திட்டம் இப்பொழுது இறைமக்களுக்கு வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. மக்களினங்களிடையே அது அளவற்ற மாட்சியுடன் செயல்படுகிறது என்பதைத் தம்மக்களுக்குத் தெரிவிக்க கடவுள் திருவுளம் கொண்டார். உங்களுக்குள் இருக்கும் கிறிஸ்துவைப் பற்றியதே அத்திட்டம். மாட்சி பெறுவோம் என்னும் எதிர்நோக்கை அவரே அளிக்கிறார். கிறிஸ்துவைப்பற்றியே நாங்கள் அறிவித்து வருகிறோம். கிறிஸ்துவோடு இணைந்து ஒவ்வொருவரும் முதிர்ச்சிநிலை பெறுமாறு ஒவ்வொருவருக்கும் அறிவுரை கூறி முழு ஞானத்தோடு கற்பித்து வருகிறோம்.

## நற்செய்தி : லூக்கா 10 : 38 - 42

அக்காலத்தில், இயேசு ஓர் ஊரை அடைந்தார். அங்கே பெண் ஒருவர் அவரைத் தம்வீட்டில் வரவேற்றார். அவர் பெயர் மார்த்தா. அவருக்கு மரியா என்னும் சகோதரி ஒருவர் இருந்தார். மரியா ஆண்டவருடைய காலடி அருகில் அமர்ந்து அவர் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தார். ஆனால் மார்த்தா பற்பல பணிகள் புரிவதில் பரபரப்பாகி இயேசுவிடம் வந்து, ”ஆண்டவரே, நான் பணிவிடைசெய்ய என்சகோதரி என்னைத் தனியே விட்டுவிட்டாளே, உமக்குக் கவலையில்லையா? எனக்கு உதவிபுரிய அவளிடம் சொல்லும்” என்றார். ஆண்டவர் அவரைப் பார்த்து, ”மார்த்தா, மார்த்தா! நீ பலவற்றைப் பற்றிக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய். ஆனால் தேவையானது ஒன்றே. மரியாவோ நல்ல பங்கைத் தேர்ந்தெடுத்துக்கொண்டாள் அது அவளிடமிருந்து எடுக்கப்படாது” என்றார்.

**தியானம்:** இயேசு தனது சீடர்களோடும் தன்னைப் பின்தொடர்ந்த மக்களோடும் போதித்துக் கொண்டே சென்று கொண்டிருக்கின்றார். அப்போது பெத்தானியா என்ற நகருக்குள் வருகின்றார். அங்கே மார்த்தா என்ற பெண்மணி தனது வீட்டிற்குள் இயேசுவை வரவேற்கின்றார். நகரத்தின் வீதியில் போய்கொண்டிருந்த இயேசுவை அன்போடு இந்தப் பெண்மணி தனது வீட்டிற்கு அழைக்கின்றாள். இயேசுவும் அவளுடைய வீட்டிற்குள் நுழைகின்றார். இயேசு உங்கள் இதய வீட்டிற்குள் வர வேண்டுமென்றால் முதலாவதாக அவரை அழைக்க வேண்டும். எங்களோடு தங்கும் ஆண்டவரே என்று அழைக்கும் போதுதான் ஆண்டவர் இயேசு நமது வாழ்க்கையில் குடிகொள்வார். கடவுளுடைய பிரசன்னம் எல்லோருக்கும் பொதுவானது ஆனால் யாரெல்லாம் அந்தப் பிரசன்னம் எனக்கு வேண்டும் என்று தாகத்தோடு கேட்கின்றார்களோ அவர்களுக்குத்தான் அந்த உடனிருப்பு கொடுக்கப்படும். மம்ரே என்னும் இடத்தில் கருவாலி மரங்களுக்கிடையே நின்று கொண்டிருந்த ஆண்டவரை, ஆபிரகாம் தனது வீட்டிற்கு அழைத்தார். கடவுளும் ஆபிரகாமினுடைய இல்லத்திற்குச் சென்று, உணவருந்தி (உணவருந்துதல் என்பது உறவின் அடையாளம், வாழ்விலே பங்கேற்றல் என்பது பொருள்), அவரை ஆசீர்வதித்தார். கடவுள் நம்மோடுதான் வாழ்ந்து கொண்டிருக்கின்றார் ஆனால் நாம் அழைக்காமல் அவர் நம்முடைய வாழ்க்கையில் நுழையமாட்டார். இதோ நான் உன் இதயக் கதவை தட்டிக் கொண்டிருக்கின்றேன். யாரெல்லாம் என் சத்தத்தைக் கேட்டு கதவைத் திறக்கின்றார்களோ அவர்களுடைய வீட்டிற்குள் சென்று அவர்களோடு உணவருந்துவேன் (தி.வெளி.3:19) என்று வாக்குத்தத்தம் தந்திருக்கின்றார். இயேசு நம்முடைய வாழ்க்கையில் வரவேண்டுமென்றால் முதலாவது நாம் இதய விருப்பத்தோடு அவரை வரவேற்கவேண்டும். வேடிக்கை பார்ப்பவர்கள் வீட்டிற்குள், வாழ்க்கையில் இயேசு நுழைவதில்லை. இரண்டாவதாக இயேசு நம்முடைய இல்லத்திற்கு வருவது நம்மோடு பேசுவதற்கு, தன்னுடைய இதயத்தின் ஏக்கத்தை வெளிப்படுத்துவதற்கு, நம்மை ஆசீர்வதிப்பதற்கு. இயேசுவுக்கு சேவை செய்ய, இயேசுவின் பெயரில் பணிகள் செய்ய நிறைய மனிதர்கள் இருக்கின்றார்கள். ஆனால் இயேசுவின் பாதத்தில் அமர்ந்து அவருடைய அன்பைச் சுவைத்து, அவருடைய இதய ஏக்கம், விருப்பம் என்ன என்பதை அறிந்து கொள்ளுகின்ற மனிதர்கள் மிகவும் குறைவு. இயேசுவின் பெயரில் சமூக சேவை, மருத்துவச் சேவை, கல்விச் சேவை, ஏழை எளியவர்களுக்கு உதவி, என்ற எண்ணற்ற பணிகளை நாம் செய்து கொண்டிருக்கின்றோம்.